என்னுடைய கோபிசெட்டிப்பாளையம் தொகுதி. பி. மேட்டுப்பாளையம் பேரூராட்சியில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளின் அடித்தளம் வலுவிழந்துவிட்ட காரணத்தால், சுவர்கள் இடிந்து மேல் கூரையும் தகர்ந்து போய்விட்டது. அந்த வீடுகளில் குடியிருந்த மக்கள் தற்போது பக்கத்திலேயே ஓலைக் குடிசைகளைப் போட்டுக் கொண்டு குடியிருந்து வருகிறார்கள். அருள்கூர்ந்து அவர்களுக்கு, குடிசை மாற்று வாரியத்தின் 100 பேரூராட்சிகளுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கிற திட்டத்தின்', அடிப்படையிலாவது புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவண செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி. மேட்டுப்பாளையத்தில் உள்ள குறிப்பிட்ட வீடுகள் முற்றிலும் பழுதடைந்திருக்கின்றன. அந்த வீடுகளை முழுவதுமாக இடித்துவிட்டு புதிதாகக் கட்டவேண்டும். பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு இதுபோன்ற தொகுப்பு வீடுகள் கட்ட இத்திட்டத்தின்கீழ் பணம் ஒதுக்கப்படுவதில்லை. ஆகவே, அந்தப் பகுதியில் இந்தத் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட முடியாத நிலையில் இருப்பதால், குடிசை மாற்று வாரியத் திட்டத்தின் மூலமாக அதற்குரிய சாத்தியக்கூறுகள் இருந்தால், ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 438, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

438—

குற்றாலத்தில் குறவஞ்சிப் பாடல்

***6374—திரு. என்.ஆர். அழகர்ராஜா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் படிக்கும் வகையில் ஆங்காங்கே குற்றாலக் குறவஞ்சிப் பாடல்களை எழுதிவைக்க சுற்றுலாத் துறை ஏற்பாடு செய்யுமா?

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1998 மே 5]

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இது சுற்றுலாத் துறையின் பணி அல்ல. திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் குற்றாலக் குறவஞ்சிப் பாடல்களை எழுதிவைக்க அரசு முடிவெடுக்குமானால், அது குறித்து ஆவன செய்ய தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறையை வேண்டலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ரவி அருணன்.

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குற்றாலத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில், வி.ஜி.பி. தங்கக் கடற்கரை, கிஷ்கிந்தா போன்ற இடங்களில் கேளிக்கைப் பூங்காக்கள் இருப்பதைப்போல, குற்றாலத்திலே சுற்றுலாத் துறையின் மூலமாக ஒரு கேளிக்கைப் பூங்கா அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்றும், அங்கே நீச்சல் குளம் அமைக்க வேண்டுமென்றும் நீண்ட நாட்களாகக் கோரி வருகின்றார்கள். அதையும் அரசு பரிசீலிக்குமா என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சுற்றுலாத் துறையைப் பொறுத்தமட்டில், ஒவ்வொரு மாவட்டத்திலும் சுற்றுலாத் துறைக்கான இடங்களைக் கண்டறிந்து அனைத்துப் பகுதிகளையும் மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும்கூட, நிதிநிலையைப் பொறுத்து, ஒவ்வொரு மாவட்டத்தையும் சுற்றுலாத் துறை தேர்ந்தெடுத்து அந்தப் பணிகள் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்திற்குச் சென்று அருவியிலே மக்கள் குளிக்கிறார்கள். அதேபோல் நிலக்கோட்டை தொகுதியில் பேரணை அருகில் ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றாலம் பற்றிதான் கேட்கப்போகிறேன் என்று சொன்னீர்கள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: அதுதான் சார், பேரணை அருகில், நிலக்கோட்டை தொகுதியில்....

[1998 மே 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவருக்குத் தவறான தகவலைக் கொடுக்கக்கூடாது. குற்றாலத்தைப் பற்றிக் கேட்கிறேன் என்று சொல்லிவிட்டு, நிலக்கோட்டையைப் பற்றிக் கேட்கிறீர்கள். (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: வெளியிலிருந்து, பல மாநிலங்களிலிருந்து மக்கள் வருகின்றார்கள். அங்கு வந்து குளிக்கிறார்கள். அது முல்லை ஆறும், வைகையாறும் ஒன்றாகக் கலக்கின்ற இடம். அந்த இடம் பார்ப்பதற்கே அழகாக இருக்கும். தண்ணீர் எப்போதும் வந்து கொண்டிருக்கிறது. 365 நாட்களும் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. ஆகையினால், அந்த இடத்திலே ஒரு சுற்றுலாத் தலம் அமைத்துக் கொடுத்தால் நமக்கு வருமானம் கிடைப்பதோடு, கண்குளிர இயற்கைக் காட்சியோடு இருக்கின்ற அந்த இடத்தை மக்கள் பார்வையிடுவதற்கு நல்ல வாய்ப்பாகவும் இருக்கும் என்பதால் அங்கே சுற்றுலாத்தலம் ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள், முதல்வர் அவர்களோடு கலந்து, அதற்கு இந்த ஆண்டிலே நிதி ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேசி, பின்னர் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. கிருஷ்ணசாமி.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலம் அருவி ஒரு அருமையான அருவி. ஆனால் அந்த அருவியைப் பற்றி தமிழ்நாட்டைத் தவிர, வெளி மாநிலங்களில் இருக்கக்கூடியவர்களுக்கும், பல்லாயிரக்கணக்கிலே இந்தியாவிற்கு வருகின்ற வெளிநாட்டினருக்கும் இன்னும் பிரபல்யமாகத் தெரியவில்லை. எனவே, வெளி மாநிலத்தினரையும், வெளி நாட்டினரையும் கவர்ந்து இழுக்கக்கூடிய வகையில் சுற்றுலாத் துறை நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற சுற்றுலாப் பகுதிகளை வெளி மாநிலத்தினரும், வெளி நாட்டினரும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் சுற்றுலாத் துறையின் சார்பாக போஸ்டர்களும், அதேபோன்று,

1998 மே 5]

அந்தந்தப் பகுதியினுடைய நிலவரத்தை எடுத்துக் கூறுகின்ற விதத்திலே சுற்றுலாத் துறையின் சார்பாக அதற்கான விவரங்களை உள்ளடக்கிய புத்தகங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சைதை கா. கிட்டு.

திரு. சைதை கா. கிட்டு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே; தமிழகத்தில் பல நகரங்களில் சுற்றுலாத் துறையின் சார்பில் தங்கும் விடுதிகள் கட்டப்பட்டு, பயணிகள் குறைந்த வாடகையில் தங்குகிறார்கள். தமிழகத்தின் தலைநகரமான சென்னையில், சுற்றுலாத் துறையின் சார்பாக, தங்கும் விடுதிகள் இல்லை. ஆகவே இங்கு தங்கும் விடுதிகள் இந்தத் துறையின் சார்பாகக் கட்டப்படுமா? அதற்கு உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தமட்டில், சுற்றுலாத் துறைக்குச் சொந்தமான நிலங்கள் இல்லாத காரணத்தால், வரும் காலத்தில் நிலங்களைக் கையகப்படுத்தி, அதற்கான பணிகளை மேற்கொள்ளக்கூடிய விதத்திலே, நிதிநிலையைப் பொறுத்து, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. வ. அப்துல் நாசர்.

திரு. அ. வ. அப்துல் நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளிக்கும்போது, குற்றாலக் குறவஞ்சிப் பாடல்களை எல்லாம் தமிழ்ப் பண்பாட்டுத் துறைதான் எழுதவேண்டும் என்று சொன்னார்கள். சுற்றுலாத் துறை எழுதவில்லை என்று சொன்னாலும், தமிழ்ப் பண்பாட்டுத் துறையாவது, அதை எழுதுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுதான் மூலக் கேள்வியே. சுற்றுலாத் துறை என்பதாலே, வேறு கேள்விகள் எல்லாம் வந்துவிட்டன. குற்றாலக் குறவஞ்சி பற்றி ஏற்கெனவே நான் இதே அவையிலே தெரிவித்திருக்கிறேன். ஏராளமான பாடல்களைக் கொண்டது. அதை முழுமையாக ஒரு

[1998 மே 5

கோயிலிலே எழுதிவைப்பது என்பது பொருத்தமாக இருக்காது. ஆனாலும் கூட அதிலிருந்து குறிப்பிடத்தக்க வரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தக் கோயில்களில் பொறிக்கப்படும் என்று இதே அவையிலே நான் ஏற்கெனவே உறுதி அளித்து இருக்கின்றேன். அது நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 439, திரு. எஸ். எஸ். மணி நாடார், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

439—

பதனீர் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

***11477—திரு. எஸ். எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதியில் பதனீர் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். மணி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சாத்தான்குளம் தொகுதியில் அதிகமான பனை மரங்கள் இருக்கின்றன. அங்கே மரம் ஏறும் தொழிலாளர்கள் சுமார் 10 ஆயிரம் பேர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழில் சுமார் 4 மாத காலம்தான் நடக்கின்றது. அதிகமான பெண்கள் இந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் கற்கண்டு செய்து நல்ல லாபம் ஈட்டுகிறார்கள். ஆகவே, இந்தத் தொழிலை வருடம் முழுவதும் செய்வதற்கு ஏற்றவகையில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வினாவைச் சுருக்கமாக எழுதி வைக்க வேண்டும்.

திரு. எஸ். எஸ். மணி நாடார்: மையப் பகுதியான பேய்க்குளத்தில் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தருமாறும், அவ்வகையில் ஏழை எளிய மக்களை வாழ வைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்றும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: பேரவைத் தலைவர் அவர்களே, பதனீர் ஒரு பருவகால உற்பத்தி உண்பொருளாகும். இது, தொழிலாளர்களால் மரத்திலிருந்து இறக்கப்பட்டதும், பனை